DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. STC 1799 /2017

Defence Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : குகபிரியா | Case | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.சோமசுந்தரம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 06$^{th}$ day of February 2023.

(Complainant absent. Petition u/s.256 Cr.P.C., filed and allowed.)

முதல் விசாரணை:

1. கடந்த 2016 ம் வருடம் ஜூன் மாதத்தில் இந்த வழக்கின் புகார்தாரரிடம் சிவகுமார் என்பவரிடம் ரூபாய் ஒரு லட்சம் கடன் பெற்றேன். முதல் மாத வட்டித்தொகைக்கு ரூபாய் 15 ஆயிரம் எடுத்துக்கொண்டு பாக்கி ரூபாய் 85 ஆயிரம் என்னிடம் புகார்தாரர் கொடுத்தார். அதன் பிறகு 11 மாதங்களில் மாதம் ரூபாய் 15 ஆயிரமாக புகார்தாரருக்கு செலுத்தி வந்துள்ளேன். மொத்தம் ரூபாய் 1 லட்சத்து 65 ஆயிரம் புகார்தாரருக்கு செலுத்தியுள்ளேன்.

2. புகார்தாரருக்கு என்னுடைய கணவரின் காசோலையைதான் நான் கொடுத்திருந்தேன். மேலும் புரோ நோட்டு கொடுத்திருந்தேன். மொத்த தொகையையும் நான் செலுத்திய பிறகும் ரூபாய் 7 லட்சம் வரவேண்டும் என்பதாக பொய்யாக கூறி எனது கணவரின் காசோலையை மாற்றி தவறாக வழக்கை புகார்தாரர் என்மீது தொடுத்துள்ளார்.

3. என் கணவர் புகார்தாரரிடம் எந்த கடனும் பெறவில்லை. காசோலை எதுவும் தரவில்லை. நான்தான் புகார்தாரரிடம் கடன் பெற்றேன். நான் புற்றுநோயாளி

என்பதால் அதனுடைய மருத்துவ செலவுக்காக புகார்தாரரிடம் கடன் பெற்றிருந்தேன். அசல் மற்றும் வட்டியை மொத்தமாக புகார்தாரருக்கு நான் செலுத்திவிட்டேன். இந்த வழக்கில் இருந்து என்னை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ரூபாய் 7 லட்சத்திற்கு வழக்கு தொடர்ந்துள்ளதால் அவ்வளவு பெரிய தொகையை என்னால் செலுத்த இயலாது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்க இணங்க வழக்கு குறுக்கு விசாரணைக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharnyan)
Judicial Magistrate No.I,
Pollachi.